# மாகோ பிரதேச சபை
# குருணாகல் மாவட்டம்

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 17 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மார்ச் 16 ஆம் திகதியும் கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளின் மூலம் தெரிய வந்தவை மற்றும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, மாகோ பிரதேச சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன், இவ்வறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகோ பிரதேச சபையின் செயலாற்றுகை தொடர்பான நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதிசார் விளைவுகளை உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) ஐந்தொகையின் பிரகாரம் காணப்பட்ட இருப்பு என மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 541,322 ஆன மீதியொன்று காணப்பட்ட போதும் அதற்குரிய இருப்புப் புத்தங்களின் பிரகாரம் பொருள்மெய்மையாய்வு அறிக்கையில் அவ்வாறான இருப்பு மீதியொன்று காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் பிரகாரம் காணாமல்போன மற்றும் அகற்றவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த ரூபா 28,064 பெறுமதியான புத்தக இருப்பொன்று கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிராததுடன் பேரேட்டில் நூலகப் புத்தகக்க கணக்கில் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட மீதி பொருள்மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டதுடன் மீதியையும் சமப்படுத்துவதற்காக நாட்குறிப்பு இலக்கம் 91 இன் மூலம் ரூபா 333,353 பெறுமதியான நூலகப் புத்தகங்கள் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு உரிய செலவினத் தலைப்பிற்கு (609) செலவு வைத்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) 2009 ஆம் ஆண்டிலிருந்து காணப்படுகின்ற ரூபா 57,498 ஆன செலுத்தப்படாத சம்பளங்களும் வேதனங்களும் மற்றும் உள்ளுராட்சி பதவியினர் கடனாகக் காணப்பட்ட ரூபா 2,075 என்பன மீளாய்வாண்டின் போதும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

11 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டு கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 40,898,859 ஆக இருந்ததுடன், பட்டோலைகள் / அறிக்கைகளின் பிரகாரம் அத்தகைய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 39,128,047 ஆக இருந்தது.

### 1.3.3 செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டுக்கும் மேலாக செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 4,787,444 ஆகும்.

### 1.3.4 கணக்காய்வுக்கான சான்றுகளின்மை

#### கணக்காய்வுக்கு தகவல்களைச் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 6,919,740 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,958,594 ஆக இருந்ததுடன், அதற்கு நேர் ஒத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 963,209 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப் பட்ட | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பி டப்பட்ட | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | | ரூபா ('000) | ரூபா ('000) | ரூபா ('000) | ரூபா ('000) | ரூபா ('000) | ரூபா ('000) |
| (i) | வீதவரியும் வரியும் | 2,027 | 1,931 | 1,871 | 2,217 | 2,089 | 1,813 |
| (ii) | வாடகை | 5,300 | 5,337 | 334 | 4,500 | 4,868 | 373 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 325 | 174 | 10 | 800 | 819 | 20 |
| (iv) | ஏனைய வருமானம் | 40,402 | 21,883 | 9,740 | 35,873 | 19,445 | 6,061 |
| | கூட்டுத்தொகை | 48,054 | 29,325 | 11,955 | 43,390 | 27,221 | 8,267 |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம்

வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிவான் நீதிமன்றங்களினால் 2010 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டுள்ள ரூபா 3,791,075 ஆன தண்டப்பணத் தொகை சபைக்கு கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.2.3 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 1,497,355 தொகை முத்திரைக் கட்டணங்களாக கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.2.4 கேள்வியின் அடிப்படையிலான வாடகையும் நீண்டகால வாடகையும்

வருடாந்த கேள்வி கோரலின் அடிப்படையில் 13 சந்தர்ப்பங்களின் கீழ் 1980 இலிருந்து 2005 காலப்பகுதிக்குரிய ரூபா 284,798 ஆன நிலுவை மீதியொன்றும் நீண்டகால வாடகைக்கு வழங்கலின் கீழ் 03 சந்தர்ப்பங்களுக்குரிய 2002 ஆம் ஆண்டிலிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 32,432 தொகையான நிலுவை மீதியொன்றும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் காணப்பட்டது.

### 2.2.5 கடை வாடகை

சபைக்குச் சொந்தமான பொதுச் சந்தையின் 06 ஆம் இலக்க கடைக்குரிய 2004 ஆம் ஆண்டிலிருந்து காணப்படுகின்ற ரூபா 30,099 தொகையான நிலுவைப் பணம் அதற்குப் பொறுப்பான இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்தும் அறவிடப்படவேண்டியதாக 2006 செப்தெம்பர் 20 ஆந் திகதிய கடிதத்தினால் உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்திருந்தார். உரிய உத்தியோகத்தர்களினால் அதற்காக முறையான விசாரணையொன்று கோரப்பட்டிருந்ததுடன் உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 சனவரி 17 ஆந் திகதிய கடிதத்தில் முறையான விசாரணையொன்று மேற்கொள்ளப்படுவதாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.2.6 ஆதனவரி

மீளாய்வாண்டின் இறுதியிலான ஏடுகளின் பிரகாரம் ஆதனவரி நிலுவை ரூபா 1,123,361 ஆக இருந்ததுடன் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158 ஆவது பிரிவு மற்றும் 1988 இன் பிரதேச சபை விதிக்கோவையின் 33 இலிருந்து 41 வரையான விதிகளின் பிரகாரம் இந் நிலுவையினை அறவீடு செய்வதற்காக காலாண்டு ரீதியாக நிலுவைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு பிடியாணை பிறப்பித்தல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு காலாண்டு ரீதியாக பிடியாணை பிறப்பிக்கப்பட்டு நிலுவை அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் வருட இறுதியில் மாத்திரம் நிலுவைப் பட்டியல் தயாரிக்கப்பட்டிருந்தது.

## 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | 2010 பாதீடு செய்யப் பட்டது | 2010 உள்ள வாறானது | 2010 முரண் | 2009 பாதீடு செய்யப் பட்டது | 2009 உள்ள வாறானது | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| **மீண்டுவரும் செலவினம்** | | | | | | |
| ஆளணி வேதனம் | 27,533 | 22,015 | 5,518 | 22,402 | 21,965 | 437 |
| ஏனையவை | 16,171 | 29,078 | (12,907) | 14,465 | 35,348 | (20,883) |
| உப மொத்தம் | 43,704 | 51,093 | (7,389) | 36,867 | 57,313 | (20,446) |
| மூலதனச் செலவினம் | 45,045 | 74,785 | (29,740) | 6,520 | 41,481 | (34,961) |
| மொத்தம் | 88,749 | 125,878 | (37,129) | 43,387 | 98,794 | (55,407) |

## 2.4 மிகை அறவீடு

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 172(3) பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பொறுப்பு வாய்ந்த ஆட்களுக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட மிகை அறவீட்டின் பிரகாரம் 2010 திசம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய மிகை அறவீடுகளின் பெறுமதி ரூபா 5,384 ஆக இருந்தது.

## 2.5 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணி

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி மற்றும் உள்ளவாறான பதவி அணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| ஊழியர் தரம் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான |
|---|---|---|
| பதவி நிலைத்தரங்கள் | 01 | 01 |
| இரண்டாம் நிலைதரங்கள் | 30 | 24 |
| ஆரம்ப தரங்கள் | 56 | 52 |
| ஏனைய(அமைய, நாளாந்த, தற்காலிக) | -- | 35 |

## 2.6 சொத்து முகாமைத்துவம்

### 2.6.1 பெறவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 55,805,842 ஆக இருந்ததுடன் 01 ஆண்டு காலத்திற்கு மேற்பட்ட கணக்குகளின் மீதி ரூபா 4,410,630 கூட்டுமொத்தமாக இருந்தது.

### 2.6.2 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 173,842 ஆக இருந்ததுடன் 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 173,842 ஆக இருந்தது.

### 2.6.3 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 30,578,639 பெறுமதியான காணியும் கட்டிடங்களும் காணப்பட்ட போதிலும் இது சம்பந்தமாக 1988 இன் பிரதேச சபை விதிக் கோவையின் விதி 218 இல் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் வருடாந்த மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பொதுச் சந்தை கடை வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் அக்கடைகளின் மின்சாரக் கட்டணப் பட்டியல்களைச் செலுத்துதல் எத்தரப்பினரால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது தெளிவுபடுத்தப்படவில்லை. அதன் காரணமாக பொதுச் சந்தையின் 22 ஆம் இலக்க கடையினைப் பெற்ற வாடகையாளரினால் மின்சாரக் கட்டணப்பட்டியல்கள் செலுத்தாததனால் 2008 ஆம் ஆண்டின் இறுதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்ததுடன் திரும்ப மின்சாரத்தைப் பெறுவதற்காக ரூபா 10,474 தொகையும் திரும்பவும் 2009 திசெம்பர் 31 ஆந் திகதி மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்ததுடன் மின்சாரத்தைப் பெறுவதற்காக ரூபா 1,456 தொகையும் இலங்கை மின்சார சபைக்கு சபை நிதியத்திலிருந்து செலுத்த வேண்டியிருந்தது. அவ்வாறு புதிய வியாபரக்கட்டிட தொகுதியில் 02 ஆம் இலக்க கடைக்காக உரிய வாடகையாளரினால் மின்சாரக் கட்டணம் செலுத்தாமையினால் 2007 ஆம் ஆண்டளவில் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்ததுடன் திரும்பவும் மின்சாரத்தைப் பெறுவதற்காக ரூபா 12,235 தொகையும் இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

### 2.8 செயற்பாட்டு வினைத்திறனின்மை

பிரதேச சபையில் சேவை புரிந்து ஓய்வுபெற்ற உள்ளூராட்சி மன்ற ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புத் தொகையை செலுத்த வேண்டிய ஊழியர்களுக்குரிய சபையினால் அந்நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய தொகையை உரிய முறையில் கொடுப்பனவு செய்யாமையால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அத்தகைய நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 3,399,496 ஆக இருந்தது.

**2.9 செயலாற்றல்**

(அ) மீளாய்வாண்டின் பாதீட்டின் மூலம் சுகாதார மற்றும் நலன்புரிச் சேவைகளின் கீழ் ரூபா 1,050,000 தொகையில் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தின் கீழ் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 08 செயற்திட்டங்களுக்குத் தேவையான நிதி இன்மையின் காரணமாக மீளாய்வாண்டினுள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டினுள் ஜாதிக சவிய, கமநெகும II ஆம் கட்டம் மற்றும் சபை நிதியத்தின் கீழ் மதிப்பிடப்பட்டிருந்த கிரயம் ரூபா 5,459,433 ஆன 10 செயற்திட்டங்களுக்கான காலம் மற்றும் எற்பாடுகள் போதிளயவாக இன்மையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.10 உள்ளகக் கணக்காய்வு**

நிறுவனத்தில் போதியளவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(இ) வருமான நிர்வாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்